RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s515

# சமூக சிந்தனையாளர் அயோத்திதாசப் பண்டிதர்

ச. வேணுகோபால் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா.

# Social Thinker Iyothee Thass Pandithar

S. Venugopal [a, *]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: venutamilphd20@gmail.com

Received: 23-07-2021
Revised: 27-04-2022
Accepted: 03-05-2022
Published: 13-07-2022

Check for updates

## ABSTRACT

Iyothee Thass Was South India's first anti-caste militant, social worker, Tamil scholar and psychiatrist. He was one of the pioneers in the formation of Dravidian movement. He was active in the fields of politics, religion and literature for the betterment of the oppressed people. He advised Buddhism that the original religion of the Pariyars was Buddhism and therefore they should convert to Buddhism. Apart from Tamil, he is proficient is Sanskrit, Pali and English. Iyothee Thass, who throughout his life worked for the interests of the oppressed, was one of the foremost proponents of the Dravidian and 'Tamil' identities. He coined the term 'Dravidian' as a political term that was only used by those who were engaged in research on the Dravidian language family. Iyothee Thass is an astonishing researcher. It is time to strictly follow the practice of untouchability of caste on Dalit people. He was a pioneer for Periyar at the Tamil Nadu level and Ambedkar at the Indian level for policies such as rational reservation, social change, caste eradication and anti-Hinduism in higher caste iyothe Thass Pandit was the first create such a social change

**Keywords:** Iyothee Thass, Social Justice, Oru paisa thamilan, Buddhism

## முன்னுரை

அயோத்திதாசர் ரேவரெண்ட் ஜான் ரத்தினத்தோடு சேர்ந்து 1885-ஆம் ஆண்டு "திராவிட பாண்டியன்" வார இதழை தொடங்கினார். 1891-ஆம் ஆண்டு "திராவிட மகாஜன சபா" அமைப்பை உருவாக்கினார். 1907- ஆம் ஆண்டு தொடங்கிய "ஒரு பைசாத் தமிழன்" வார இதழ் பத்திரிக்கை ஓராண்டுக்குப் பிறகு "தமிழன்" என்று பெயர் மாற்றம் அடைந்தது. அயோத்திதாசர் மறைவுக்குப் பின்னரே நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிடக் கட்சிகள் என்று திராவிட இயக்க வரலாறு தொடங்குகிறது என்றாலும் சிந்தனை மரபு, சாதி ஒழிப்பு, தமிழ் அரசியலின் முன்னோடி அயோத்திதாசர்.

## காத்தவராயன் (எ) அயோத்திதாச பண்டிதர்

பொதுப் பாதைகளைப் பயன்படுத்துவதற்கும், கிணறுகள், குளங்கள் போன்ற பொது நீர் நிலைகளில்கூட அவர்களின் நடையில் "சுத்த ஜலம் மொண்டு குடிக்கவும்" அம்மக்களுக்கு அப்போது உரிமை இல்லை. தீண்டத்தகாதவர்கள் என்று சமூகத்தால் ஒதுக்கப்பட்டும், நிலமற்ற ஏழைகளாகவும், பொருளாதாரம், கல்வி போன்றவற்றில் மிகவும் பின்தங்கியிருந்த நிலையில் இருந்தனர்.

உயர் சாதியினர் நிலங்களில் தலித் மக்கள் "பண்ணையாள்" என்னும் அடிமைகளாகச் சுரண்டப்பட்டும் ஒடுக்கப்பட்டும் கிடந்த கொடுமையானதொரு காலத்தில் அச்சமூகத்திலிருந்து அயோத்திதாசப் பண்டிதர் எழுச்சி பெற்று வந்தவர் (Samas, 2017).

தமிழறிஞர், தத்துவவாதி, புலவர், எழுத்தாளர், அரசியல் சிந்தனையாளர், விமர்சகர், அரசியல்வாதி, பேச்சாளர், சித்த மருத்துவர், சமயப் புரட்சியாளர் போன்ற பன்முக ஆளுமையாய் நம்முன் தோன்றும் அயோத்திதாசர் அம்பேத்கருக்கும் முற்பட்ட தலித் அரசியலுக்கான கருத்தியல் முன்னோடி எனலாம். மேலும் தலித் அரசியலும், தலித் கருத்துகளும் திராவிட அரசியல் கூட இவரிடம் இருந்தே தொடங்குகிறது என்பதே வரலாற்றுப் பதிவாகும்.

கோயம்புத்தூர் அரசம்பாளையம் என்னும் ஊரில் 1845 மே 20-இல் கந்தசாமி தம்பதிக்குப் பிறந்த அயோத்திதாசருக்கு அவரது பெற்றோர்கள் சூட்டிய பெயர் காத்தவராயன். தன் ஆசான் புலவர் வீ. அயோத்தி தாச கவிராஜ பண்டிதர் என்பவர் மீது கொண்ட ஆழ்ந்த பற்றின் காரணத்தால் தனது பெயரை அயோத்தி தாசர் என்று மாற்றிக் கொண்டார். தமிழ் இலக்கியம், இலக்கணம், பன்மொழிப் புலமை, மருத்துவம் போன்ற கலைகளில் தேர்ந்தவர்களுக்குப் பண்டிதர் என்னும் அடைமொழியை வழங்கி கௌரவிப்பது அக்காலத்து வழக்கமாயிருந்துள்ளது. அதன்படி அயோத்திதாசரின் பெயரை அடுத்துவரும் பண்டிதர் என்னும் அடைமொழியும் அவ்வகையில் வந்து சேர்ந்திருக்க வேண்டும்.

சிறந்த தமிழறிஞரும், தொழிற்சங்க முன்னோடியும் தேசபக்தருமான திரு.வி. கலியாணசுந்தர முதலியார் தமது சிறுவயதில் அயோத்திதாசரிடம் சிகிச்சை பெற்றதாக 'வாழ்க்கைக் குறிப்புகள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். முதலியார் என்பது உயர் சாதிகளில் ஒன்று. அயோத்திதாசருக்கு மட்டும் இம்மாதிரியான வாய்ப்புகளும் கௌரவங்களும் எப்படிச் சாத்தியமானது?

## தமிழும் திராவிடமும்

பார்ப்பனர் அல்லாதோருக்கான சங்கத்தை டாக்டர் சி. நடேசனார் என்பவர் "சென்னை திராவிடர் சங்கம்" என்று 1912 ஆம் ஆண்டு துவக்கினார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மக்களை இணைத்த பண்பாட்டுச் சொல்லான "திராவிடம்" என்ற சொல்லை முதன்முதலாகப் பயன்படுத்தியவரும் நடேசனார்தான் என்பது வரலாறு. ஆனால், தமிழக வரலாற்றில் திராவிட இயக்க அரசியல் தோற்றத்தில் டாக்டர் சி. நடேசனாரிடமிருந்து பார்ப்பவர்களுக்கு நடேசனாருக்கு முன்பே அயோத்திதாசர் உள்ளிட்ட ஆதிதிராவிட அறிஞர்கள் பலர் திராவிடம் என்ற பெயரால் இயக்கங்களைத் தோற்றுவித்துச் செயல்பட்டுள்ளனர் என்பது தெரியாமல் போனது தமிழனுக்கு வரலாற்று இழப்பு.

1870-ஆம் ஆண்டு எழுந்த திராவிட சங்கங்கள், சபாக்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் 1892-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஆதிதிராவிட ஜனசபை, 1916-ஆம் ஆண்டு பதிவு செய்யப்படாத ஆதிதிராவிட மகாஜன சபை போன்றவற்றின் சிந்தனைகள் காலத்தால் முற்பட்டவை என்பதும், அவற்றில் அயோத்திதாசரின் பங்கு சமச்சீர்மையானது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கனவாகும். 01.12.1891-ஆம் ஆண்டு திராவிட மகாஜன சபையின் முதல் மாநாடு நீலகிரியில் அயோத்திதாசர் தலைமையில் நடைபெற்றது.

"அம்மாநாட்டில் பறையர் என்று இழிவாகப் பேசுவது குற்றம் எனக் கருதும் சட்டம், கல்விக்கு உதவித் தொகை, அரசு வேலை, உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம், ஆதிதிராவிடர்களுக்குப் பொது இடங்களிலும் அரசு அலுவலகங்களிலும் நுழையும் உரிமை உட்பட பத்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அத்தீர்மானங்கள் காங்கிரஸ் செயலாளர் வீர. இராகவாச்சாரியார் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை." (Malar mannan, 2012).

"1892 ஆம் ஆண்டு சென்னை விக்டோரிய மகாலில் கூட்டப்பட்ட சென்னை மகாஜன சபைக் கூட்டத்தில் அயோத்திதாசர் கலந்து கொண்டு தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி வேண்டுமென்றும், புறம்போக்காக உள்ள நிலங்களை எங்களது ஏழை கிராமவாசிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளார். பார்ப்பான எதிர்ப்பு, அரசியல், சாதி ஒழிப்பு, பெண் விடுதலை,

வகுப்புவாரி பிரதிநிதித்துவம், கல்வி, அரசு வேலைகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாய்ப்புக் கோரியது உட்பட அயோத்திதாசரின் பகுத்தறிவுச் சிந்தனைகள் நம்முன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. திராவிட இயக்க அரசியலுக்கு முன்னோடியாகத் திகழ்ந்து தமிழ் மண்ணில்தோன்றிய திராவிட இயக்கம் அயோத்திதாசப் பண்டிதரிலிருந்து தான் துவங்குகிறது என்பதை கூறலாம்" (Venkatachalam, 2019).

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று முத்தமிழை அறியலாம். அயோத்திதாசர் மூவகை பேசும் தமிழென்று கொடுந்தமிழ், கருந்தமிழ், செந்தமிழ் என்றும் வேறொரு முத்தமிழ் பரிமாணத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். சமூகத்தின் மூளையில் இயல், இசை, நாடகம் என்பதே முத்தமிழ் என்று பதியவைத்த தமிழறிஞர்கள், அயோத்திதாசரின் முத்தமிழ் குறித்த விளக்கத்தின்மேல் போதுமான ஆய்வுகளும் விமர்சனங்களும் முன்வைக்காமல் நிராகரித்துள்ளனர் என்பது திகைப்பூட்டுகிறது.

தென்மொழியாம் திராவிடம், தமிழ் என்னும் இரு மொழிகளும் ஒரு மொழிக்குரிய பெயர்களேயாகும் என்பதன் மூலம் தமிழையே முதன்மைப்படுத்துகிறார் அயோத்திதாசர்.

அதேவேளையில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் உட்பட திராவிட மொழிகள் பன்னிரண்டு என்னும் மொழியறிஞர் டாக்டர் கால்டுவெல் அவர்களின் முடிவுகளுடன் ஒப்பிடுகையில் திராவிட மொழிகள் பற்றிய அயோத்திதாசரின் கருத்து முரண்படுகிறதுதான்.

மேலும் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு ஆகியவை திருந்திய மொழிகள் என்றும், துதம், கோதம், கோண்ட், கூயி, இராஜ்மஹால் திருந்தா மொழிகள் என்றும், பிரிக்கப்பட்டு அவற்றுக்குத் தனது சிறப்புகளால் தமிழ்மொழியே தலைமை வகிக்கிறது என்றதன் மூலம் கால்டுவெல் தமிழே திராவிடம் என்னும் அயோத்திதாசரின் கருத்துடன் ஏறக்குறைய ஒத்துப்போகிறார். திராவிடம் என்பது தமிழ்மொழியே எனும் அறிஞர்களின் கருத்துகள், தமிழை முதன்மைப்படுத்தும் பண்டிதரின் கருத்துகளுக்குத் துணை நிற்கின்றன.

## பகுத்தறிவு: பௌத்தம்

இயற்கையில் இடி, மழை, வெள்ளம் போன்றவைற்றைக் கண்டு பயந்து நடுங்கிய ஆதி மனிதன், இவற்றையெல்லாம் கண்ணுக்குப் புலப்படாத ஏதோவொரு மாய சக்தி அந்தரத்திலிருந்து வருகிறது என்று நம்பினர். அதனால் இயற்கை நம் மீது கோபம் கொண்டுள்ளது என்பதை நம்பிக்கையில் வழிபடுவதன் மூலமாக இயற்கை சீற்றங்களிலிருந்து விடுபடலாம் என்று நம்பிக்கையில் மதம் மற்றும் கடவுள் நம்பிக்கை, வழிபாடு, சடங்குகள், மந்திர தந்திரங்கள், பேய் - பிசாசு - ஆவிகள் பற்றிய கதைகள் ஊடாக மூடநம்பிக்கை சமூகமாக மாற்றினர்.

மனிதனின் குறுகிய எண்ணங்களிலிருந்து மதம் பிறந்ததுஎன்பார் ஏங்கல்ஸ். இயக்க இயல் பொருள் முதல்வாதம் எனப்படும் மார்க்சிய மெய்ஞானம், மதம் மக்களுக்கு அபின் மதம் என்பது ஆன்மீக பெரும்போதை, மதம் என்பது ஆன்மீக ஒடுக்குமுறையின் வடிவம் என்றெல்லாம் மதங்கள் குறித்து வரையறை செய்து வைத்திருக்கிறது.

"கி.மு. ஆறாம் நூற்றாண்டுகளின் மத்திய காலங்களில் தோன்றி, ஆறு ஆண்டுகளில் தியான வலிமையின் மூலம் போதி மரத்தின்கீழ்ப் பெற்ற ஞானத்தால், புத்தர் பௌத்த மார்க்கத்தை உருவாக்கினார். பௌத்தம், மதம் என்னும் வகைப்பாட்டுக்குள் அடங்காமல் அறிவு, அன்பு, அறம், நீதிநெறி போதிக்கும் மென்மையானதொரு மார்க்கமாக தனித்து நிற்கிறது. கடவுள், ஆன்மா, மறுபிறப்பு, விதி என்று பிற மதங்களால் கற்பிக்கப்பட்டுள்ள மூடநம்பிக்கைகளை மறுத்து எழுச்சி மிகுந்த பகுத்தறிவு மையமாகவே பௌத்த சமயம் விளங்குகிறது" (Venkatachalam, 2019).

பறையர்களை சாதி பேதமற்ற திராவிடர்கள் என்றழைத்த அயோத்திதாசர், பௌத்தத்தை அவர்களது பூர்வ மதம் என்றார். பௌத்தம் பார்ப்பனர்களின் இருப்புக்குச் சவாலாய் இருந்தது என்பதாலும், அப்பௌத்தத்தை கைகளில் ஏந்தி பாதுகாத்து வந்தவர்கள், பறையர்கள் என்பதாலும்

அவர்கள்மீது பகைமைப் பாராட்டிய பார்ப்பனியம் பெரும் சூழ்ச்சிகள் வகுத்து பறையர்களை தீண்டத் தகாதவர்களாக ஆக்கியது என்றார் (Alocious, 1999).

அம்பேத்கரும் கூட மகர்வர் நாக வம்சத்தைச் சேர்ந்தவர். பார்ப்பனியத்துக்கும் பௌத்தத்துக்குமான போட்டியில் பௌத்தம் தோற்கடிக்கப்பட்டு நாகர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டனர் என்றார். கி.பி. இரண்டாம் நூற்றாண்டுகளில் பார்ப்பனியம் வென்று மேலாதிக்கம் பெற்றதுடன், தீண்டாமை தோற்றம் கொண்டதாக வரலாற்றுச் சான்றாதாரங்களுடன் நிறுவுகின்றனர் அயோத்திதாசரும் அம்பேத்கரும். இவ்வகையில் வழக்கொழிந்து போன பௌத்தம் மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டும் என்று செயல்பட்டார் அயோத்திதாசர்.

பகுத்தறிவு அடிப்படையில் வடிவமைக்கப்பட்டவை என்பதாலும், பௌத்தம் அடிப்படையிலேயே சாதி மறுப்புக் கொள்கையுடையது என்பதாலும் யாவரையும் சமமாக பாவிப்பது சமத்துவக் கண்கொண்டு அணுகுவது என்பன போன்றவை பௌத்தத்தின் அடிநாதமாக விளங்குகின்றன என்பதாலுமே அச்சமயத்தால் ஈர்க்கப்பட்டனர் என்பதுவே சரி. அயோத்திதாசர், அம்பேத்கர் ஆகிய இவ்விருவரும் இந்தியச் சமுதாயத்தில் நிலவும் பார்ப்பனிய மேலாதிக்கத்தையும், இந்து மதத்தின் சாதிய ஏற்றத்தாழ்வுகளையும், சமூகநீதி அங்கீகாரத்தோடு எதிர்கொள்வதற்கான வாய்ப்புகள் பௌத்தத்திற்குள் அமைந்திருக்கின்றன.

## இதழ்: ஒரு பைசாத் தமிழன்

அன்றைய காலத்தில் காலணா விலையில் "ஒருபைசாத் தமிழன்" இதழ்கள் வெளிவந்தன. உயர்நிலை, இடைநிலை, கடைநிலை என்ற பாகுபாடு உடைய மக்களுக்கு, நீதி, சரியான பாதை, நேர்மை ஆகியவற்றைக் கற்பிப்பதற்காக தத்துவவாதிகளும் இயற்கை விஞ்ஞானிகளும் கணிதவியலாளரும் இலக்கியவாதிகள் என்று பலர் ஒன்று கூடி இவ்விதழை நடத்தி வந்தனர். தமிழ் மணம் தர விரும்பும் தமிழர் ஒவ்வொருவருக்கும் கையொப்பம் வைத்திதனைக் கோருகிறோம் என்று அறிவித்தார்.

இதழின் முகப்பில் "ஒரு பைசாத் தமிழன்" என்ற இதழின் பெயரை புத்தக் குறியீட்டு வடிவமான தாமரை இதழ்களின் மீது எழுதி, அதன் இடதுப்புறம் ஜெயது என்றும், வலப்புறம் மங்களம் என்றும் நடுவில் நன்மெய்க் கடைபிடி" என எழுதி, இருபுறமும் மலர்க் கொத்து என அழகுணர்வோடும் நேர்த்தியாகவும் இதழின் சின்னம் இருந்தது.

முதல் இதழில் கடவுள் வாழ்த்து, அரசர் வாழ்த்து, தமிழ் வாழ்த்து, அரசியல் தொடர், நாட்டு நடப்புச் செய்திகள், சித்த மருத்துவக் குறிப்புகள் என செய்திகளின் முக்கியத்துவம் கருதி வகைப்படுத்திப் பிரசுரிக்கப்பட்டது.

ஓராண்டுக்குப் பிறகு வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க அச்சுடன் பத்திரிக்கைப் பெயரும் மாறுதல் அடைந்தது. தமிழனில் வெளிவந்த செய்திகளும் விரிவாக்கம் செய்யப்பட்டிருந்தன. பத்தரிகைப் பெயரும் "ஒரு பைசா தமிழன்" என்ற பெயர் நீக்கப்பட்டு "தமிழன்" என்ற பெயரோடு அமைந்தது.

மகளிர் பற்றி தலைப்பில் பெண்கள் கல்வி, வேலை வாய்ப்பு, பெண்கள் முன்னேற்றம் பற்றிய செய்திகள் இடம் பெற்றன. நாட்டு நடப்புகள், பொதுச் செய்திகள், வானிலை அறிக்கை, வாசகர் கடிதங்கள், அயல்நாட்டுச் செய்திகள், விளம்பரங்கள் மற்றும் நூல் விமர்சனங்கள் தொடர்ந்து இடம் பெற்றிருக்கின்றன. தமிழர்கள் அதிகம் வசித்த கர்நாடக கோலார் தங்க வயல், குடகு, பர்மா, தென்னாப்பிரிக்கா, இரங்கூன், சிங்கப்பூர் போன்ற அயல்நாடுகளிலும் "தமிழன்" இதழ் பரவியது.

"மூட நம்பிக்கை, தீண்டாமை கொடுமைக்கு ஆதரவளிக்கும் வேத இதிகாசப் புரட்டுகள் பற்றி, பிராமணீய மேலாதிக்கம் பற்றி விரிவாக ஆய்வு செய்தார். யதார்த்த பிராமண வேதாந்த விவரம், வேஷ பிராமண வேதாந்த விவரம், ஸ்ரீ முருகக் கடவுள் வரலாறு, விபூதி ஆராய்ச்சி போன்ற நூல்களில் வேத மத எதிர்ப்பு, பிராமணிய எதிர்ப்பு, மூடப்பழக்கம் எதிர்ப்பு, சாதி ஒழிப்பு போன்ற கருத்துக்களைக் குறித்து விரிவாக எழுதினார்" (Gowthama Sanna, 2007).

தமிழக வரலாற்றில் எந்த இயக்கமும் தோன்றாத காலத்தில் சமூக நீதி, சமூக மதிப்பீடுகள், விளிம்பு நிலை ஒடுக்குமுறைகள் குறித்து பேசினார். அதிகாரத்தில் பங்கு, பிரதிநித்துவ அரசியல், ஒடுக்கப்பட்டோர் விடுதலை, பெண்ணியம், தமிழ் மொழியுணர்வு, பகுத்தறிவு, சுயமரியாதை, சாதி ஒழிப்பு, இந்தி மொழி எதிர்ப்பு, வேத மத பிராமணீய எதிர்ப்பு, தீண்டாமை போன்ற கருத்துகளை உரையாடச் செய்து பல இயக்கங்களுக்கு ஒரு முழுமையான அரசியல் கொள்கைகளின் தொகுப்பை வழங்கியது தமிழன் இதழ்.

## முடிவுரை

பகுத்தறிவு, இடஒதுக்கீடு, சமூக மாற்றம், சாதி ஒழிப்பு, பார்ப்பனிய இந்துமத எதிர்ப்பு போன்ற கொள்கைகளில் தமிழக அளவில் பெரியாருக்கும், இந்திய அளவில் அம்பேத்கருக்கும் முன்னோடியாக விளங்கியவர் அயோத்திதாசர். காலங்காலமாக ஒடுக்கப்பட்ட தலித்துகளை அரசியல் பேச வைத்து மொழிக்காகவும், இனத்திற்காகவும் இலக்கியத்திற்காகவும் தொண்டாற்றிய இம்மேதையைப் புரிந்து கொள்ள நாம் சாதியைக் கடந்து சிந்திக்க வேண்டும். அதற்கு நாம் சாதிய மனப்பான்மையைத் தூக்கியெறிய வேண்டும். பகுத்தறிவைப் பயன்படுத்தி சிறந்த சமூகத்தினை உருவாக்குவோம்.

## References


Alocious, G., (2019) Ayothithasar Sinthanaigal, Folklore Resources and Research Centre, St. Xavier's College, Tirunelveli, India.

Gowthama Sanna, (2007) Panditharin Kodai Samooga Neethi Kolgai, Pulam Pathippagam, Chennai, India.

Samas, (2017) Therkil Irundhu Oru Suriyan, Tamil Thisai Pathippagam, Chennai, India.

Malar mannan, (2012) Dravida Iyakkam - Punaivum Unmaiyum, Kizhakku Pathippagam, Chennai, India.

Venkatachalam, V., (2019) Ayothithasarin samooga sinthanaigal seyalgalum, Pulam Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License